New Apostolic Church
India

# நன்றி செலுத்துதல் 2024

அன்பான சகோதர சகோதரிகளே,

நாம் வளர்ந்து வருகிற போது நமக்கு ஏதாகிலும் கொடுக்கப்படுகிற போது "நன்றி" என்று சொல்லும்படி நம் பெற்றோர்கள் கற்றுக்கொடுத்தது நாம் பெற்றிருக்கிறவைகளை மதிக்கவும் அதனைப் பாராட்டவும் நமக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற முயற்சியாகும். விரைந்தோடுகிற இந்த உலகத்தில் நாம் ஒரு வாரத்திலிருந்து மற்றொரு வாரத் திற்கும் ஒரு நிகழ்விலிருந்து மற்றொரு நிகழ்விற்கும் கடந்து போகிறோம். நாம் சந்தர்ப்பங்களை சுவைக்கவும், அனுபவங்களை நினைவுகூரவும், நம் கரங்களில் இருக்கும் சிறிய வாய்ப்புக்களைப் பாராட்டவும் வேண்டி நாம் மிகக்குறைவாக நேரம் ஒதுக்குகிறோம்.

நாம் நம் திருச்சபையின் நன்றி செலுத்தும் நாளை அக்டோபர் 6, 2024 ஞாயிறன்று நெருங்கிற போது, தேவன் செய்திருக்கிற அற்புதமான கிரியைகளையும் அதிசயங்களையும் நின்று, எண்ணிப்பார்ப்போமாக (1 நாளாகமம் 16:12), தேவன் நமக்கு ஜீவனைக் கொடுத்திருக்கிறார்; நாம் அவரது பெரிய சிருஷ்டிப்பில் ஒரு அங்கமாக இருக்கிறோம். தேவன் கர்த்தராயிருந்து தொடர்ந்து தமது சிருஷ்டிப்பை விசாரிக்கிறார். தேவன் நம்மை நேசிக்கிறார், அவர் மனிதர்களைக் கைவிடாமல் நம் நடத்தைக்கேற்றபடி அல்லாமல் நம்மிடத்தில் இரக்கம் காண்பிக்கிறார். நாம் தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் உத்தமத்தைச் சார்ந்திருக்கமுடியும்.

NAC பாமாலையில் பாடல் எண் 177 (இந்திய பாடல்கள் 250-பாமாலையில் எண் 63) "ஈவை எண்ணும் சொல்லி ஒவ்வொன்றாய்" என்பது நமக்கு நல்ல ஒரு புத்திமதியாக அமைகிறது, அதினால் அனைத்தும் தேவனிடமிருந்து வருகிறது, நாம் முற்றிலும் அவரையே சார்ந்திருக்கிறோம் என அறிகிறோம். நம் வாழ்வானது பிறரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருப்பினும், நாம் சிருஷ்டிப்பைப் பகிர்கிறோம். நாமனைவரும் ஈவுகளைப் பெற்றிருக்கிறோம், நாம் தேவ அன்பை அனுபவித்தறிகிறோம், அவரது கிருபையும் அவரது உத்தமமும் நம்மை மூடுகிறது. அவர் நம் இரட்சிப்பையும் நம்முடனான நித்திய ஐக்கியத்தையும் வாஞ்சிக்கிறார். மேலும், நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வின் மற்ற பல ஆசீர்வாதங்களையும் கூறமுடியும்.

நாம் நம் திரியேக தேவனைத் தொழுகிறது போது துதிக்கவும், போற்றவும், நன்றி செலுத்தும்படியும் அசைக்கப்படுகிறோம். நாம் காணிக்கையைக் கொண்டுவருதல், சுவிசேஷத்தைப் பரவச்செய்தல் மூலம் உறுதுணையாயிருத்தல், தேவ வேலையில் ஊழியம் செய்தல், நம் அயலவருடன் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சிருஷ்டிப்புடனும், நம் குடும்பத்தாருடனும் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் நம் நன்றிப்பெருக்கை தேவனுக்குத் தெரியப்படுத்து முடியும்.

நாம் தாழ்மை, பொறுமை, அன்பு, நன்றிப்பெருக்குடன் நம் விசுவாசத்தின் இலக்கை நோக்கி முன்னேறுகிறோம்: அது நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையாகும்.

நாங்கள் கனடா மாவட்டத்தின் அப்போஸ்தலர்கள் மற்றும் பிஷப்புகளுடன் இணைந்து, ஆசீர்வாதமான நன்றிசெலுத்துதலும், உங்கள் குடும்பங்கள் மற்றும் சபையின் வட்டாரத்தில் மிகுந்த மகிழ்ச்சியும் சமாதானமும் உண் டாயிருக்கும்படி வாழ்த்துகிறோம்.

உண்மையுடன்,

மார்க் வோல்

**Thanksgiving**
6 October 2024
Tamil